## 43. ஒன்றுமில்லா நேரத்தில் என்னை

### பல்லவி

ஒன்றுமில்லா நேரத்தில் என்னை
நிரம்பி நடத்திவருகின்றீர் ஐயா

### அனுபல்லவி

*என் காலமோ உம் கரத்தில் உள்ளது*
*என் வாழ்க்கையோ நீர் வரைந்த ஓவியம்*

### சரணங்கள்

1. பட்டமரமாயிருந்தேன் பகட்டில்லா போனேன்
மனிதன் என்னை மறந்தனரே
மாறாத தேவன் என்னை தேடி வந்தீர்
உமது கரத்தால் இழுத்து கொண்டீர்
- என் காலமோ

2. பெலவீன நேரம் தடுமாறும்போது
எல்லாராலும் தள்ளப்பட்டேன்
பெலனான தேவன் என்னை கண்டீர்
உமது பெலத்தால் நிரப்பிவிட்டீர்
- என் காலமோ

3. கலங்காதே என்றீர் திகையாதே என்றீர்
நான் உனக்கு சகாயம் செய்வேன் என்றீர்
நீதியின் கரத்தில் நித்தமும் தாங்கி
என்றென்றைக்கும் நடத்துவேன் என்றீர்
- என் காலமோ